Reg. No. M. 2997.

தனிப்பிரதி 1 அணா

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை,
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOUAYER
MADAM NO. 4, Pondicherry.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து
வீதி நெ. 4, புதுவை.

VOL. I. { புதுவை, ஸ்ரீமுக ௵ பங்குனி மீ ௨௰௩ (5—4—34) } No. 19.

சூத சங்கிதை.

ஆகாரசுத்தியினாலவிர்சித்தசுத்திபுறம்
போகாதசிவஞானம்பொருந்துமதனாலுடனே
மோகாதிபந்தமற—மொழிதருமச்சுத்தியின்றேல்
வாகாருஞ்சித்தசுத்திமுதலியவைமருவாவே.

ஆதலினான்மறைகடிந்தவனைத்துமுறைதொழிந்திடுதன்
மேதகுசுத்தியதாகும்விளம்புமிதுகருமிகட்கே
சாதல்பிறப்பில்லாராய்த்தாமேதாமாய்நிற்கும்
போதமிகுஞானிகட்கபோச்சியமொன்றேனுமில்லை.

சிவஞானிபவஞ்சமேலாஞ்சிவமாகக்காண்பதனா
லவமாகாப்போச்சியமெல்லாமவற்கென்றறையுமறை
பவமாயமுயன்றீர்சொப்பனப்பவஞ்சஞ்சாக்கிரத்தி
லெவனுமற்றதுபோன்ஞானிக்கில்லைசாக்கிரப்பவஞ்சம்.

ஈழநாடும் தமிழும்

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன்
வித்துவான் ப்ரம்மஸ்ரீ சி. கணேசையர்
அவர்கள் எழுதியது

(15-ம் வாரத் தொடர்ச்சி).

ஆரியச்சக்கிரவர்த்திகள்

ஈழநாட்டின் வடபாகத்துள்ள நாடு யாழ்ப்பாணம். இதற்கு "மணற்றி" என்பது முற்பெயர். தொண்டை நாட்டினின்றும் ஈழநாடு வந்த யாழ்ப்பாணனொருவன், அப்போது அதன் தலைநகராயிருந்த அநுராசபுரம் சென்று, அரசனாகிய ஏலேலசிங்கனைக்கண்டு, தன் யாழ்ப்பாடலின் திறமையைக் காட்டி, அவனிடம் பரிசிலாக "மணற்றி" என்னும் இக்காட்டைப்பெற்று, காடு கெடுத்து நாடாக்கி, தன் பெயரானே இதற்கு "யாழ்ப்பாணம்" என்னும் பெயரை இட்டு, தானே அரசு செய்திருந்தான். அவனிறந்த பின், சோழராஜனால் அனுப்பப்பட்ட அவன் (அச்சோழன்) புதல்வன் ஒருவன் சிங்கையாரியச் சக்கிரவர்த்தி என்னும் பெயரோடு முடிசூட்டப்பெற்று அரசாண்டான். அவன்தன் இராஜதானியாகிய நல்லூரிலே, தன்னாட்டினும் பிறநாட்டினுமிருந்து பண்டிதர்கள் சிலரை அழைத்து ஒரு தமிழ்ச்சங்கம் தாபித்து, அதற்குச் சர்வமானியமாக ஒரு கிராமத்து வயனிலங்களையும் விடுத்தான். அக்கிராமம் இப்பொழுது சங்கவேலி (சங்கு வேலி) என்னும் பெயரோடு விளங்குகின்றது. அச்சங்கப்புலவர்கள் செய்த நூல்கள் யாவும் இவனால் அமைக்கப்பட்ட "சரஸ்வதிமகாலயம்" எனப் பெயரமைந்த புத்தகாலயத்தில் வைக்கப்பட்டிருந்தன என்றும், அது சிங்கள அரசன் ஒருவனால் தீக்கொளுவப்பட்டு அழிந்ததென்றும் சரிதநூல்கூறும். அதனாற்போலும் அவர்கள் செய்த நூல்களாயினும் தனிச் செய்யுட்களாயினும் எமக்குக் கிடைத்தில. இவனுக்குப்பின் இவன் மரபில் வந்த குணபூஷணசிங்கையாரியச் சக்கிரவர்த்தியும் தமிழை நன்கு பரிபாலித்தனன். இவன், "அடியார்க்கு நல்லார்" என்னும் பண்டிதமணியை இந்தியதேசத்தினின்றும் அழைப்பித்துத் தனக்கு முதன் மந்திரியாக வைத்து, அப்பண்டிதமணி வாயிலாகக் கல்வியை விருத்தி செய்தான். அன்றியும் அப்பண்டிதமணியால் அறுபத்துமூன்று நாயன்மார்க்கு ஒரு மடாலயமும், தன் பெயராலும் அப்பண்டிதமணி பெயராலும் இருகுளங்களும் அமைப்பித்தான். மடாலயம் அமைந்த இடம் "நாயன்மார்கட்டு" என்றும், குளங்கள் முறையே "ஆரிய குளம்" என்றும் "அடியார்க்கு நல்லார் குளம்" என்றும் வழங்குவனவாயின. "அடியார்க்கு நல்லார் குளம்" இக் காலத்துக் "கன்னுகிட்டிக் குளம்" என வழங்கலாயிற்று. இப்பண்டிதமணியே சிலப்பதிகாரத்துக்கு உரை செய்த "அடியார்க்கு நல்லார்" என்பர் சிலர். அது பொருந்துமோ என ஆராயத்தக்கது. இக்குணபூஷண சிங்கையாரியன் மகன் விரோதயசிங்கையாரியன் காலத்திலேயே கண்ணகி கோயில்கள் யாழ்ப்பாணத்தில் உண்டாயின என்று சரிதம் கூறலின் ஒருகால் அவன் காலத்து இப்பண்டிதமணி இருந்து உரை செய்திருக்கலாம் என்பது ஊகிக்கத்தக்கது. விரோதயனுக்குப் பின்னுள்ள ஆரியச் சக்கிரவர்த்திகள் காலத்திலே சிலப்பதிகாரம் என்னும் நூல் இங்கே பெரிதும் வழங்கியுள்ளது என்பதற்குப் பல சான்றுகள் உளவாதலின் ஒரு போது சிலப்பதிகார உரையை இவ் அடியார்க்கு நல்லாரே செய்திருக்கலாம். சரித காலங்கள் முன் பின்னாக மாறியும் இருக்கலாம் என்பதும் இங்கே நோக்கத் தக்கது.

பரராசசேகரன்

இவன் கி. பி. 1410-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்தரசாண்ட குணவீரசிங்கையாரியன் மகனான கனகசூரியசிங்கையாரியனுடைய புதல்வன். இவனுடைய தந்தையாகிய கனகசூரியசிங்கையாரியன் பகைவருக்கஞ்சி இந்தியதேயத்துக்குச் சென்றபோது அங்குத் தொண்டைமண்டலத்துள்ள திருக்கோவலூரிலே இவனையும் இவன் தம்பியாகிய செகராசசேகரனையும் ஒரு ஆசிரியனிடம் கல்வி பயிலும்படி விடுத்திருந்தான் என்றும், பின்னர்ப்பதினான்கு வருஷம் கழித்து இவனையும் இவன் தம்பியையும் அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்து பரராசசேகரனாகிய இவனுடைய உதவியாற் பகையரசனை வென்று இவனை இளவரசனாக்கித் தான் அரசனாகவிருந்து யாழ்ப்பாணத்தை யாண்டான் என்றும், தந்தைக்குப் பின் இவனே அரசாண்டானென்றும் யாழ்ப்பாணச் சரித்திரங் கூறும். இவன் அரசனாயிருந்த காலத்தே இவனிடம் தொண்டை மண்டலத்துள்ள பூதூரைப் பிறப்பிடமாகவும் பொற்களந்தைப் பதியை வாசத்தானமாகவுங் கொண்ட 'அந்தகக் கவி வீரராகவ முதலியார்' என்னும் புலவர் வந்து, தாம் பாடிய வண்ணக் கவியை இவன் முன்

னிலையில் அரங்கேற்றி அக்கவிக்குப் பரிசிலாக இவனிடம் பொன்னின் பந்தமும், மத்தயானையும், பிறவும் பெற்ருர். அவர் இவன் பொற்பந்தமளித்தபோது இவனை வியந்து பாடிய செய்யுளை இங்கே காட்டுதும். அது—

வெண்பா.

"பொங்குமிடி யின்பந்தம் போயதே யென் கவிதைக்
கெங்கும் விருதுபந்த மேற்றதே—குங்குமந்தோய்
வெற்பந்த மானபுய வீரபர ராசசிங்கம்
பொற்பந்த மின்றளித்த போது." என்பது

இவனுங் கவிபாடுவதில் அதிசாமார்த்தியமுடையனுயிருந்தான் என்பது அக்கவிவீரராகவரைப் புகழ்ந்து பாடிய சில செய்யுட்களாலறியக்கிடக்கின்றது. அக்கவிகள் வருமாறு:—

கட்டளைக் கலித்துறை

"புவியே பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க் கெலாஞ்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானவனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியநற்
கவியே கவியவ னல்லாத பேர்கவி கற்கவியே."

இது அவர் பாடிய திருவாரூருலாவைக் கேட்டபோது மன்னன் பாடியது.

கட்டளைக் கலித்துறை

இன்னங் கலைமகள் கைம்மீதிற் புத்தக மேந்தியந்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப்பா ளென்ன புண்ணியமோ
கன்னன் களந்தைக் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்முன் கனமுத் தமிழையுமே.

இது அவர் கல்வித்திறமை நோக்கி மன்னன் பாடியது.

விருத்தம்

வீரகனு முத்தமிழ் வீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வாணனு மொப்பத் தோன்றினுற்
சிரகர கம்பித செய்ய லாகுமே.

இது அவர் வண்ணக்கவியை அரங்கேற்றியபோது மன்னன் பாடியது.

(தொடரும்)

மதிப்புரை

ஞாயிறு:—இது, மண்டலப்பெயர் கொண்டு விளங்கும் நாடுகளுள் ஒன்ருகிய ஈழமண்டலத்துச் சிரமுறு மணியெனத் திகழும் யாழ்ப்பாணத்து வண்ணைக் "கலாநிலைய" நன்மக்களால் இளவேனில் முதலிய அறுபெரும் பொழுது தோறும் வெளியிடப்படும் புத்தக வடிவினதாகிய அரிய பெரிய செந்தமிழ்ச் சஞ்சிகை ஆகும். இதன் "உதிர்க்கதிர்" காணப்பெற்று மகிழ்கூர்ந்தேம். இதன்கண் புலத்திய முனிவர் உருவச்சிலை என மிக்க கெம்பீரமானதோர் உருவப்படமும், அறிஞர் சிலரால் வரையப்பட்ட புதியனவாகிய தோத்திரப்பாக்களும், செந்தமிழ் நறுந்தேன் பிலிற்றி ஆராய்ச்சித்திறன் விளைக்கும் அரிய கட்டுரைகளும், நிகழ்ச்சிகளும், ஆராய்ச்சிக் குறிப்புக்களும், பன்மணிக் கோவையும், மதிப்புரைகளும் அடங்கியுள்ளன. மிகச் சிறந்த தடித்ததாளில் ஏறக்குறைய நூறு பக்கங்கள் கொண்ட புத்தக வடிவின்தாய் அழகுற அமைந்து இலக்கியம், இலக்கணம், தருக்கம், தத்துவ சாஸ்திரம், சரித்திரம் முதலிய பல துறைப்பாற்படும் அரிய பெரிய கட்டுரைகளோடு மிளிர்கின்ற இக்கார்ப்பருவப் பைங்கதிர், நம் தெய்வச் செந்தமிழணங்கின் திருமுலைத்தடயல்வருஉம் மணியியல் ஆரம் போல ஒளிர்கின்றது என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. "ஞாயிறு" ஆசிரியக் கழகத்தார் நன்முயற்சியும், அமைச்சராகிய உயர்திரு சுவாமி உருத்திரகோடீசுவரர் அவர்கள் கல்வியறிவின் பரப்பும், இடையீடில்லா உழைப்பும், பாவலர் புலமைத்திறனும், கட்டுரையாளர் கல்வி நலனும் மதிப்பொலிவும் இப் பசுங்கதிர் ஒளி எனத் தயங்குகின்றன.

"தென்றமிழ் நிலத்தினரன்று தாம்பலகாற்
பிரித்துறை சொன்னைய ரகித் தெரிந்த
யாழின் வந்த வாழ்வுடைப் பெயரிற்
ருழ்வின்றேங்கிய தண்டமிழ் நிலத்தினு
[ம்"

என நல்லிசைப் புலமைவாய்ந்த திருநல்லூர் வெள்ளியந்திருமலை கிழார் என்னும் பெரியார் பணித்தவாறு, பண்டைக்காலந் தொட்டே "செந்தமிழணங்கு திரு நடம் பயிலும் திருவரங்கென மருவியாழ்ப்பாண" வளம்பதியானது, மேலும் தன் பெற்றியிற்குன்ருவண்ணம் பல்லாற்ருனும் இடையீடின்றி உழைத்துவரும் வண்ணைக் "கலாநிலைய" நன்மக்களுக்குப் பெரும்பான்மை ஈழமண்டலமும் ஏனைய தமிழ் நாடும் மிக்க கடப்பாடுடையனவே என்பது மிகை யன்று. இத்தகைய அருமை பெருமை வாய்ந்த "ஞாயிறு" என்னும் பருவ வெளியீடும் "கலாநிலைய"மும், நீடுவாழும்படி இறைவன் திருவருள் புரிவானுக. [ப—ர்].

நன்கொடை

"வித்தகம்" எனும் எமது பத்திரிகைக்கு மனமுவந்து நன் கொடையாக ரூபா ஒன்று அளித்த சிலோன் வாவுனியா வியாபாரி திருவாளர் பெ.வேலு பிள்ளை அவர்களுக்கு எமது மனமார்ந்த வணக்கம் என்றும் உரிமையாகற்பாலது.

"வித்தகம்"

வருட சந்தா விவரம்

முன் பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3-0-0

மலாயா, சிங்கப்பூர் சைகோன் } ரூ. 4-0-0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

உ
திருவருள் துணை.

மநந்திபதி கோல்

காலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றான்வந்து முந்துமினே
(திருவாசகம்)

வித்தகம்

புதுவை.
ஸ்ரீமுக வரு பங்குனி மீ 23 உ

அருந்தல் பொருந்தல் அனந்தல்

அருந்தல் பொருந்தல் அனந்தல் என்றால் என்னை? அவை தாம் முன்னிலையில் தலைமையாகித் தடித்து விளங்கும் பொருள்களை — உலகப் பொருள்களை நிறை முறையோடு அருந்ததலும் அவ்வாறு அருந்தியது பொருந்துவதால் அஞ்ஞானமாகிய அழுக்குநான்னும் மாயை அறுபடு அறுவாய் அனந்தல் அடைதலுமாம். அனந்தல்-கெடுதல்-கெட்டுத் திரிதல். அஃதாவது பாசமே அருளாய் — ஞானமாய் மாற்றமடைதல் — பயன் படுதல் என்பது. இவ் அருந்தல் பொருந்தல் என்பன சீவர்களுக்கு இன்றியமையாதவை. இவை சீவ இயலுக்கு ஐ=சீவ இயற்கை. இத்தகைய இயற்கை நெறியோடு நின்றே இயற்கை வடிவான கடவுளை அடைதல் வேண்டும். அருந்தல் பொருந்தல் அமையப் பெறாதவன் முத்தி வாயிலை அடைதல் முடியாது. இவற்றைத் தவிர்த்தல் இயற்கை விரோதமாகும். இவற்றைத் தவிர்த்து முத்தி வாயிலை—எம்பெருமான் திருவடியை அடைதல் என்பது முயற்கொம்பே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. அருந்தல் பொருந்தல்களாற்றான் நாம் கட்டுக்கள் அற்று வீடு பேறு அடைய முடியும் என்று கூறினால், உலகம் இதனை எவ்வகையான தடையுமின்றி எளிதில் ஒப்புக்கொள்வது கஷ்டமே யாகும். ஏன்? நிறை முறையோடு முன்னிலை அன்னத்தை அருந்தி—முன்னிலையை உறவுபடுத்தி உய்தி பெற அறியாது சாதலடைவதே உலகியலாதலால் என்க. மாயையை — பிரபஞ்சத்தை — தென்புலத்தை உறவுபடுத்தி வென்ற பின் தான் —விதியை வென்ற பின் தான் மாயாதீதமாகிய பதியை — பற்றற்ற இடத்தை அடைய முடியும், அடைந்து "அதுவாக" முடியும். எதனால் பிரவிருத்தி பெறப்பட்டதோ அதனாற்றான்—அதனை நிறை முறை கண்டு உண்டு உறவு படுத்தி வெல்லுதலாற்றான் நிவர்த்தியும் பெறப்பட வேண்டும்; அதனைக் கடந்து கரை யேற வேண்டும். இயற்கை முறை இதுவே.

அருகவையுடைய அன்னம் தூலகுக்கும சரீரங்களின் உய்வுக்கு இன்றியமையாதது என்பதும் சகல போகங்கட்கும் ஆதாரம் அவ் அன்னமே என்பதும் அரிய பெரிய இருக்கு வேதத்தாலும் நன்கு வற்புறுத்தப் பட்டது

மண்டலம் 1, அநுவாகம் 24, சூக்தம் 8,
இருக்குகள் 11, அஷ்டகம் 2,
அத்யாயம் 5, வருக்கம் 5.

சைவித்பிதவைப் புரஞ்சல் மிகுமொய்ம்
புனையத னையை புடர்விப் பவனைத
திரிதன் வகியைக் கனுவிற் கனுவி
வரிசியச் செயப வண்மையை வீகுவனே. 1.

(இ—ள்.) பாலகனும், மிகுந்த பலத்தினால் பூமி உயர்வை அடையுமாறு தாங்கிப் பிடிப்பவனும், திரிதனாகிய இந்திரன் அறியாகிய விருத்திரனைக் கணுக்கணுவாய் அழிப்பதற்கு வேண்டிய பலத்தை அளிப்பவனுமாகிய அன்ன தேவதையை விரைவாகப் புகழ்வேன். (எ-று)

உண்ணுதற் குயர்வோங்கிய தந்தையே
நண்ணுமத்த நலத்துறு பாலக
யண்ணியுன்னை யழகிற் றுதிப்பமா
லெண்ணி யெந்தனை யாளனுமெய்து*. 2.

(இ-ள்.) உண்ணற் கினிமையாயுள்ள அன்னமாகிய தந்தையே! மதத்தை யூட்டும் சோமமாகிய தந்தையே! உன்னை அடைந்து யாங்கள் அழகாகத் துதிப்போம். எங்களுக்குத் துணையாளனாக இருப்பாயாக. (எ-று)

அருகி னெந்தமாட் டொழுகுக மங்கல [மார்ந்து
பெருகு நற்றுணை தம்மொடும் பிறங்குறு [சிவரு
பிறம னத்துறுதின்பளி நண்பனே யின் [பின்
மருவு மன்னமே சுகத்தினை மன்னுவிப்ப
வனே. 3.

(இ-ள்.) மங்கலத் தன்மை நிறைந்து நல்ல உதவிகளோடு கூடிய சிவஸ்வரூபியாய் இருதிறப்படாமற் களங்கமற்ற சுகத்தைத்தரும் சகாயவானே! இன்பத்தோடு கூடியவனே! சுகத்தை அடைவிப்பவனே! அன்னமே! எங்களுக்குச் சமீபத்தில் வர்த்திப்பாயாக (எ-று.)

அன்னமே யுன் சுவினுறு மச்சுவை
மன்னி யோங்கி விரிந்து வளர்ந்தன
வுன்று மச்சரலோகத் தலைப்பின் வான்
நன்னயத்துப் பரவிடு வாதனின். 4.

(இ-ள்.) அன்னமே! ஆகாயத்துப் பரந்து கிடக்கும் வாயுவைப் போல உன்னிடத்து அந்த அறுசுவைகளும் உலக முழுவதும் பலவிதமாக விரிந்து பெருகியுள்ளன (எ-று.)

அன்னமே சுவையார் தருதக்கதையே,யுனது
பின்னமில் கொடையிவைகளும் பேசு
[முன்னிரதந்
தன்னூற் சுவைதாமு மீத்தடித்த வெங்
[கழுத்தின்
மன்னுபோத்தினன்கோக்கியே வினைவன
[பணியே. 5

(இ-ள்.) அன்னமே! ருசி நிறைந்த பிதாவே! உனது (கெடாத) இக்கொடைகளும் உனது அறுவகைப் பட்ட சுவைகளின் ருசியும் தடித்த கழுத்துள்ள காளைமாடுகளைப் போலத் தொழில்செய்கின்றன (எ-று.)

மேலே காணப்படும் அமுத வாக்கியங்களால் முன்னிலையாகிய அன்னம் என்னும் உணவுப் பொருள்கள் தூல சரீரருக்கும சரீர உய்வுக்கு இன்றியமையாதன என்பதும், அவ் உணவுப் பொருள்களால் ஆம் பயன் இன்னது என்பதும் தூலமாகப் புலப்படுகின்றன. தூல சரீரத்தை அன்னமய கோசம் என வேதம் முறையிடுவதன் உண்மையும் இதுவே.

ஔவை குறள்

அன்னத்தா லாய வுடம்பின் பயனெல்லா
முன்னேனைக் காட்டி விடும்.
(ஷை-உடம்பின் பயன். 10.)

என்றனள் ஆதிசத்தியின் அவதாரம் எனப்படும் ஔவை. இதன் பொருள் பலர்க்கும் வியப்பைத் தருவதாகும். சாப்பாட்டினால் கடவுளைக் காண்பது எப்படி? ஈதென்ன விந்தை! உணவை அறவே ஒழித்துப் பட்டினிக் கிடப்பதால் அல்லவா கடவுள் அருளைப் பெற முடியும்! என்பர் ஒரு சாரார். இச்சைப்படி புஷ்டியான சுவையான உணவுகளை உண்பதனாற்றான் உய்தியடையலாம் என்பர் மற்றொருசாரார். ஆனால் வேதம் இவ்வாறு முறையிட வில்லையே! ஐம்புல நுகர்ச்சி நிறைமுறை தழுவி நிற்கவேண்டுமென்றே வேதம் முறையிடுகின்றது. சிவர்கள் சரீரப் பிறப்பின் நிலைமையைக் குறித்து எமது கிழவி (ஔவை) தாம் அருளிய தெய்வச் சுருதியாகிய திருக்குறளில் முதலாவது அத்தியாயமாகக் கூறியிருப்பதைச் சிறிது ஆராய்ந்தால் "அன்னத்தின் பயன் கடவுளைக் காண்டல்" என்னும் வேத உண்மை புலப்படாததாகாது. பின்வரும் சுருதிப் பிரமாணம் இவ் உண்மையை நன்கு வற்புறுத்துகின்றது:

சாந்தோக்கிய உபநிடத தாற்பரிய வர்ணனம்.

"ஆகார பீஜ யோனி விவகாரம்"

"தத்தமது வருணாச்சிரம அநு
"சாரம் அடைவுற்ற அன்ன பானதி
"விடயக் கவர்ச்சி ஆகாரமாம். அஃது
"யாவனுக்கு இராகத்வேஷமற்ற மதி
"யானே பாவமற்றுத் தூய்தாமோ
"அவன் மனமே தூய்தாம். அவ்
"ஆகார சுத்தி யின்றிச் சித்த சுத்தி
"உண்டாகாதாம். ஆகார சுத்தி
"யுடைய புருஷனுக்குப் பாவ கருமத்
"தே பிரீதி உண்டாகாததேபோல,
"பீஜ யோனி விவகாரம் என்னும்
"மூன்றன் சுத்தி உடையவனுக்கு
"ஆபத்துக் காலத்திலும் பாவகருமத்
"தின் கண்ணே பிரீதி உண்டாகா
"தாம். ஈண்டுப் பிதிர் குலம் பீஜமாம்.
"மாதுர் குலம் யோனியாம். பதார்த்
"தங்களின் கிரகண பரித்தியாகம்
"விவகாரமாம்."

"இவ்வாறு ஆகார விவகார பீஜ
"யோனி என்னும் நான்கன் சுத்தி
"யால் சித்த சுத்தி உற்றவன் ஒரு
"காலத்தும் பாவகருமத்தே முய
"லான். பாவ கருமமே சித்த ஏகாக்
"கிரப் பிரதிபந்தகமாம். ஆகாராதி
"களின் சுத்தியால் பாவ
"கருமங்கள் அற்றவனும்போது
"ஒருமையை உறுவன். உற்றவன்
"பிரம்ம வேத்தாவாய ஆசிரியரின்
"உபதேசத்தானே விரைவாகவே
"தன் "பூமா" வடிவ ஆன்மாவை
"ஸாக்ஷாத்கரிப்பன்."

மேலே கூறிய ஆகாரம் முதலியன அருந்தல்பொருந்தல்களில் அடங்கும். ஆகாரம் = அருந்தல். பீஜ யோனி விவகாரம் = பொருந்தல். இவை இன்றியமையாதவை. எதற்கு? முத்தி வாயிலில் அடி வைப்பதற்கு. ஆகார பீஜ யோனி எனும் இம் மூன்றற்கும் "விவகாரம்" இன்றியமையாதது. விவகாரம் 'கிரகண தோஷ பரித்தியாகம்' எனப்படும். அஃதாவது "சுத்தி" என்பது.

பஞ்சேந்திரியங்களால் நுகரப்படுவன வெல்லாம் — முன்னிலைகளெல்லாம் "அன்னம்" என்னும் சப்தத்தால் அழைக்கப் படுகின்றன. அன்னம் — உண்ணப்படுவது, நுகரப்படுவது. உணவு.

"உண்ணவென்பது நன்மயப்படுத்தல்"
(நூற்றொகை விளக்கம்—சூத்திரம் 24.)

முத்தி வாயிலில் அடிவைப்பதற்கு அருந்தல் பொருந்தல்கள் இன்றியமையாதன என்பதை பின்வரும் பிரபல தெய்வச் சுருதிகள் நன்கு உறுதிப் படுத்துகின்றன.

திருமந்திரம்

அஞ்சு மடக்கடக் கென்ப ரறிவிலா
ரஞ்சு மடக்கு மமரரு மங்கில்லை
யஞ்சு மடக்கில சேதன மாமென்றிட்
டஞ்சு மடக்கா வறிவறிந் தேனே

(ஷை 7-ம் தந். 25-வது இந்திரிய மடக்கு முறைமை.)

முன்னிலைகளாகிய பஞ்சேந்திரிய நுகர்வுப் பொருள்களை நிறை முறையோடு நுகர்ந்து உய்தியடைவதை ஒழித்துப் பஞ்சேந்திரியங்களை அடக்கவேண்டும் என ஓலமிடுவோர் அறிவிலார் என்பதும், இவ்வாறு அடக்கும் நெறி யறியாது அடக்குதலால் அசேதனத்வமே யன்றிச் சேதனத்துவமாகிய ஞானம் கைகூடுதல் முடியாத காரியம் என்பதும், இந்திரியங்களை நிறையுட் புகுத்துதலே ஞான நெறி என்பதும் இம் மந்திரத்தால் நன்கு வலியுறுத்தப் பட்டன.

குறள்

மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

(ஷை. 95-ம் அதி. மருந்து. 1.)

(இ-ள்.) மிகினும் குறையினும்—அருந்தல் என்னும் உணவானது சரீர பௌதிக நிறையோடு அமையாது மிகுந்தாலும், குறைந்தாலும் நூலோர் வளி முதலா எண்ணிய மூன்று—வைதிகமென்னும் வைத்திய நூல்களை அநுபவ முறையாக உணர்ந்த பெரியார், (வாயு) வாதம் முதலாகக் கணக்கிட்டுக் கூறிய மூன்றும், நோய் செய்யும்—நமது சரீரத்தில் நிறையோடு பொருந்தாது ஏற்றத் தாழ்ச்சியுடையனவாய்த் துன்பஞ் செய்யும் என்பது.

இதனால் முன்னிலை அருந்தல்களை நிறையறிந்து அளவோடு உண்ணுதலின் இன்றியமையாமை கூறப்பட்டது. வளி முதலா எண்ணிய மூன்று—வாத பித்த சிலேத்துமங்கள் வளி முதலா என்றார் வாயுவே யாவற்றுக்கும் மூலம் என்பது புலப்படுதற்கு. வாயு தான் யாவற்றுக்கும் முதன்மையானது. அது குற்றமுடையது. நிறைமுறை யில்லா அசைவென்னும் வாயு கனத்தன்மை அடைந்திருப்பதே குற்றமுடையதென்பது. பக்கச் சலன கதி யுடையதே குற்றமுடையதென்பது. இக் குற்றம் எனும் கனத்தன்மை தகர்தல் வேண்டும். இது எளிதன்று. வகரம் எனும் வாயுவினுள்ள குற்றம்—கனம்—கனம் என்னும் அழுக்கு—அசுத்தம்—களிம்பு அகற்றப்படுதற் பொருட்டு எண்ணிறந்த உபாயங்கள், தந்திரங்கள், அறத்தாறுகள் என்பவைகளைக் கூறும் மகா உக்கதமான நூல்களையே "வேதம்" என வழங்குவர். வ+ஏதம் = வேதம்; வ+ஏது+அம் = வேதம் எனினும் ஆம். யாவற்றுக்கும் மூலமாகிய இந்த வாயு சுத்தப்பட்டுழி வ+ஏதம் என்பது வ+ஆதம் எனத் திரிந்து வாதம் என வழங்கப்படும். "ஆதமிலி யான் பிறப் பிறப்பென்னும் அரு நரகில்...." (திருவாசகம்—திருவேசறவு 3.) எனவும், "ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட் கொண்டு..." (ஷை கண்டப் பத்து 5) எனவும் வரும் திருவாசகச் செய்யுட்களில் "ஆதம்" என்பதன் உண்மைப் பொருளும் இதுவேயாம். வாயு சுத்த மடைதற்கேற்ற அறத்தாறுகள் அருந்தல் பொருந்தல்களுள் அடங்கும். வாயு சுத்த மடையவே அக்கினி சுத்தமடையும், ஏனையவும் ஏதம் நீர்ந்து சமப்படும். அக்கினியின்றி வாயு தனி உருவம் பெறாது. பக்கச் சலன கதி விடுத்து அக்கினியோடு கூடிய வாயு தூலமெனும் சத்தியில் உறைந்துழி, சுழிமுனையைத் தாவி ஆரோகண கதி பெறும்; மலக் குரம்பையானது விமலக்குரம்பையாக மாறும். பொன்மய தேகமாக—ரகூக தேகமாக மாறுவதே வாதம் என்பது—வாதம் செய்தல் என்பது. செம்பொன்செய் சுண்ணம் இடித்தல்—"நாதற்குச் சுண்ணம் இடித்து நாமே" என்பதும் இது. "கூற்றைநீக்கிக் குறைவறுத் தாள்வதோர், மாற்றிலாச் செம்பொன் ஆவர் மாற் பேறரே" (திருமாற்பேறு—திருக்குறுந்தொகை 5) என்னும் அப்பர் திருமறைப் பொருளும் இதுவே என்க. வைத்தியமே வைதிகம். வைதேகம் = வைதிகம். ஐந்தில் மூன்றை எட்டத் தெரிந்தவர் வைத்தியர்—வைதேகர். இவரே வைதிகர். "ஐந்தில் மூன்றை எட்டடா" என்பதனை உலகமாக்கள் 'ஐந்தும் மூன்றும் எட்டடா" என்பர். திரிகாடிகளின் உற்பனம் யாங்ஙன்? முக்குணம் என்றால் என்னை? இவற்றையெல்லாம் வைதிகம் அறியாத உலக மாக்களாகிய போலி வைத்தியர் அறிவது என்றால் அது முயற்கொம்பேயாகும். சற்குருநாதனாகிய பவ ரோக வைத்தியனே சீவர்கள் சட பேதம் கர்மபேதங்களை அறிந்தேற்ற சாதகங்களால்—அருந்தல் பொருந்தல்களாகிய விதிகளால் வாதம் புரிய வல்லவனுவன்—பிண நாற்றம் நாறும் புலால் துருத்திகளை பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கிப் பூமணம் கமழும் பூந்துருத்திகளாக மாற்ற வல்லவனுவன் என்க. "மருந்து" என்னும் இவ் அதிகாரத்தில் அருந்தல் என்னும் உணவையே தேவர் முக்கியமாகக் கூறியதன் உண்மையையும் நோக்குக. "மாறுபாடில்லாத வுண்டி மறுத் துண்ணின், ஊறுபாடில்லை யுயிர்க்கு" (குறள்-மருந்து 5.) என்பதனால் சாக்காடு நீங்கி நித்தியத்துவம் அடைதற்கு அருந்தல் என்னும் உணவே முக்கியமாதல் நன்கு வலியுறுத்தப்பட்டது. மாறுபாடில்லாத உண்டி—சரீர பௌதிக நிறைக்கு இணக்கமான உணவு. மறுத்தல்—பஞ்சேந்திரிய நுகர்ச்சியை நிறையுட் புகுத்துதல். இக்குறளின் உரையை "உணவு" என்னும் அத்தியாயத்துக் காண்க.

"துற்றவை துறந்த வெற்றுயிராக்கை
அருந்தவர் காட்சியுட் டிருந்த ஒளித்தும்"
(திருவாசகம்—திருவண்டப்பகுதி.)

என்பன முதலியவற்றாலும் அருந்தல் பொருந்தல் அமையப் பெறாது ஒரு பால்ஒதுங்குவோர் எத்துணைப்பெரிய தவத்தினர் என உலக மாக்களால் புகழப்படினும் அன்னவர்க்கு முத்தி வாயில் குதிரைக் கொம்பே என்பது நன்கு வலியுறுத்தப்பட்டமை கண்டு கொள்க "...பையவே கொடுபோந்து பாசமெனும் தாழ் உருவி, உய்யு நெறி காட்டு வித்திட்டு...." (திருவாசகம். அச்சோபதிகம் 7.) எனனும் திருமறை அருந்தல் பொருந்தல்களால் மணிவாசகர் உய்தியடைந்த இவ் வுண்மையையே உணர்த்தி நின்றது.

பஞ்சேந்திரிய நுகர்வுகளை அறவே வெறுத்தலால்—பெண்களைக் கைவிட்டுக் காட்டுக்குப் போவதால் துறவு கைகூடுமா? கைகூடமாட்டாது; வாய்மையான துறவின் பெற்றியும் அறியப்படமாட்டாது; நிவினை நிறை குறுக மாட்டாது; முன்னிலை தன்னிலைகள் ஒன்றுபடுதலாகிய நல்லுணர்ச்சி—ஞான உணர்ச்சி ஆக்கமுற மாட்டாது.

அருந்தல் என்னும் அத்தியாயம் தற்காலத்தவரால் வெறுக்கப்படுவதொன்றாயிற்று—அறியப்படாததாயிற்று. பஞ்சேந்திரியங்களை நிறையுட் புகுத்தும் நெறியறியாது நாவிற்குச் சுவைபடும் உணவுகளையே—எளிதிற் பெறத்தக்கனவற்றையே யாவரும் இஷ்டம் போல — அவகாசம்

போல நிறை முறை யின்றி அருந்தியும் பட்டினி கிடந்தும் வளி முதலா எண்ணிய மூன்றும் நோய் செய்ய அதனால் சாதலடைகின்றனர்—உடலம் வம்பு பழுத்து மாண்டு போகின்றனர். வம்பு பழுத்து உடலம் மாண்டு போதல் கூடாது என்று அருளியது மணிவாசக சிவம். (திருவாசகம்—குலாப்பத்து. 6.) ஒருவன் "ஒரு பொழுதே உப்பிலாப் புற்கை உண்கின்றேன்—பால் பழமே உண்கின்றேன் — பட்டினி கிடக்கின்றேன்" என்பானாயின் அவனையே உலகினர் பெரிய மகான் எனப் போற்றுவர்—முத்தி வாயிலில் நிற்கின்றான் எனப் புகழ்வர். உடல் உயிர்களை அழியாது காக்கும் மருந்து உணவே—அன்னமே என்பதனை அறியாதார் பலர் உணவு விஷயத்தில் நிறை முறை இன்றி ஒழுகி அதனை அலட்சியம் செய்து கொலைஞரும் பாதகருமாய்த் தமக்கே கேடு சூழ்வர். பின் வரும் தேவர் திருவாக்கு அன்னவர்க்கு உண்மையை அறிவுறுத்துகின்றது:

குறள்

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந் [திய
தற்றது போற்றி யுணின்.

(ஷை 95-ம் அதி. மருந்து. 2)

(இ—ள்) அருந்தியது அற்றது போற்றி உணின் — முன் உண்ட உணவு சீரணமாதலைப் பொறுமையோடு காத்திருந்து பசி தோன்றியபின் மேல் உண்ணுதலை ஒருவன் பெறுவானாயின், யாக்கைக்கு மருந்தென வேண்டாவாம்— அவன் உடம்பு நோயின்றி இனிது நிலைப்பதற்கு அவ் உணவே யன்றி மருந்து என்று பிறிதொன்று வேண்டுவதில்லை என்பது.

அற்றது போற்றி உண்ணும் உணவே நோய்தீர்க்கும் மருந்தாகலின், அஃதொழிந்த பிறிதோர் மருந்து மிகை என்பது கருத்து. "அற்றது போற்றி உணின்" என்பது அவ்வாறு உண்ணுதலின் அருமை தோன்ற நின்றது. அவாவின் வயத்தராயும் பிறரை மகிழ்வித்தற் பொருட்டும் அற்றது போற்றாது உண்போரே பலர். போற்றாது உண்ணுதலே நோய்க்குக் காரணமாகும். போற்றி உண்போர் மிகச் சிலரே. "ஞாலம் தான் வந்திடினும் பசித்தொழியப் புசியோம், நமனார்க் கிங்கேது கவை நாமிருக்கு மிடத்தே" என்றனர் சித்தர் ஒருவர்.

அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு.

(ஷை—ஷை 3.)

(இ-ள்.) அற்றால் அளவு அறிந்து உண்க—முன் உண்ட உணவு சீரணமானால் பின் உண்ணும் உணவை மிகுதியும் குறைவுமின்றி வேண்டிய அளவினை அறிந்தே உண்ணுக, உடம்பு பெற்றான் நெடிது உய்க்கு மாறு அஃது — காயமாகிய பெண்ணைத் தனக்கு உரிமையாகப்பெற்ற அறிஞன் அக்காயப் பெண் தனக்கு நிலைக்கும்படி செய்யும் சாதகம் அதுவே யாகலான் என்பது.

அற்றது போற்றி அளவறிந்து உண்ணும் உணவே காயசித்தி அளித்தற்கேற்ற சிறந்த கற்பமாகும். அன்றிப் பட்டினிகிடத்தலும் நிறை முறையின்றி அளவறியாது உண்ணுதலும் பிறவும் காயசித்தி அளித்தற்கேற்ற சாதகமாகா என்பது கருத்து. இவ்வாறு ஆருயிர் மருந்தாகிய அருந்தலை—அன்னத்தை நிறையறிந்து இனமறிந்து அளவறிந்து உண்ணுதலையே "கற்பம் சாப்பிடுதல்" என்பர் சித்தர் பெருமக்கள். இவ்வுண்மை அறியாதார் காடுகளிலும் பிற இடங்களிலும் இருந்து பட்டினியாலும் பிறவாறும் "துற்றவை துறந்த வெற்றுயிராக்கை" யராய் மெய்யுணர்ச்சி கைவரப்பெறாது அசேதனத்துவமடைந்து ஈற்றில் தென்புலக்கோமகனுக்கு நல்விருந்தாகிப் பிறவிவலைப்படுவர்.

அற்ற தறிந் து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

(ஷை—ஷை—4)

(இ-ள்.) அற்ற தறிந்து—முன் உண்ட உணவு சீரணமானதைக் குறிகளால் நன்குணர்ந்து, துவரப் பசித்து—மிக்க பசி உண்டான பின், மாறல்ல கடைப்பிடித்து துய்க்க—சரீக பௌதிக நிறைக்கு மாறுபாடில்லாத உணவுகளை குருநெறியானும் அநுபவ முகத்தானும் கண்டறிந்தனவற்றை மதிவைராக்கியத்தோடு தவறாது உண்ணுக என்பது.

தனது காயப் பெண்ணை நிலைக்கச் செய்யும் பக்குவமுடையவன் அக்காயமாகிய சரீரத்தில் எவ்வெப் பௌதிகங்கள் எவ்வெவ்வகையானஏற்ற இறக்க நிறையாகப் பொலிந்திருக்கின்றதோ அவ் அவ் நிறையைக் குறைக்கவும் கூட்டவும் வேண்டி—அவ் அவ் நிறைகள் சமப்படுதல் வேண்டி ஏற்ற ஏற்ற உணவுகளாகிய கற்பங்களையேஉண்ணுதல் இன்றியமையாத தாதலின் "மாறல்ல துய்க்க" என வற்புறுத்தப்பட்டது.

இழிவறிந் துண்பான்க ணின்பம்போ [லிற்கும்
கழிபே ரிரையான்க ணோய்.

(ஷை—ஷை—6.)

(இ—ள்.) இழிவு அறிந்து உண்பான் கண் இன்பம் போல்—தனது சரீர பௌதிக நிறைகளின் இறக்கத்தையும் ஏற்றத்தையும் அறியப்பெற்று அவை சமப்படுதற்கேற்ற உணவுகளை உண்ணும் மதிப்பொலிவுடையான் மாட்டு இன்பம் இடையறாது நிற்றல் போல, கழிபேரிரையான் கண் நோய் நிற்கும்—நிறையும் இனமும் அறியாது பல பிறப்புகட்கு வித்தாய் விளக்கும் அவாவினால் விலங்குகள் போல நேர்ந்த நேர்ந்தவாறு அளவு கடந்த உணவை உண்ணுவானிடத்து துன்பம் இடையறாது நிற்கும் என்பது.

இழிவு எனவே ஏற்றமும் உய்த்துணர வைக்கப்பட்டது. பௌதிக நிறை யறிந்து ஏற்ற உணவு அருந்துவார் இடையறு இன்பம் எய்தி நிலைபெறுதலும், அவாவினால் நேர்ந்தவாறு

இஷ்டம்போல உண்பவர் நோய்வாய்ப் பட்டு இறத்தலும் இதனால் வலியுறுத்தப்பட்டன. சரீரமாகிய பூமியில் பஞ்ச பௌதிகங்களாகிய பஞ்ச திணைகள் ஏற்றிழிவடைந்து நிறை பேதித்து நிற்றலே பிணி மூப்புச் சாக்காடுகளுக்குக் காரணமாகும். நிறைபேதித்தலே திணை மயக்கமாகும். திணை மயக்கங்களை அறிவது மிக அரிது. ஒரு திணையை மற்றொரு திணையாக மாற்றுவதும் அரிதினும் அரிதாம். ஆசானின்றி இது முடியுங் காரியமன்று. ஆசானுரை வழி அநுட்டிக்கும் வைதிக நெறியாகிய அருந்தல் பொருந்தல்களால் திணைமயக்கம் தீர்ந்து பௌதிகங்கள் சமப்படுதலால் பேரின்பமாகிய வீடு பேற்றின்பம் இடையறாது ஈண்டும். இவ்வாற்றால் முத்தி வாயிலை அடைதற் கேற்ற அரிய பெரிய சாதகமாகிய அருந்தல் பொருந்தல் என்னும் வேத உண்மையே "மருந்து" என்னும் அதிகாரத்தில் தேவரால் முக்கியமாகக் கூறப்பட்டமை வெள்ளிடை மலையாம். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே, உணவெனப்படுவது நிலத்தொடு நீரே" (புறம்) எனப் பிறர் கூறியதும் அறிக. "பூநீர்" என்னும் சித்தர் பரிபாஷையின் உண்மைப் பொருளும் ஈண்டு நோக்கற்பாலது.

திருமந்திரம்

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கு
மெண்ணிலி பாவிக ளெம்மிறை யீசனை
நண்ணறி யாம னழுவுகின் றாரே.

(தெ. 7ம். தந். 11-வது சிவபூசை. 6)

என்னும் திருமூலர் திருமந்திரப் பொருள் "சிவபூசை" என்னும் அத்தியாயத்தில் விரித்துக் கூறப்படும்.

அருந்தல் பொருந்தல் என்னும் அரிய பெரிய சாதகங்களால் ஆம்பயன் என்னை? எனின், சரீரத்தின் அழுக்கு நீங்க— ஒன்பது வாசலாலும் சோரும் மலம் நிமலமாக எம்பெருமான் குடிபுகப் பெறுதலேயாகும். இதற்கு அறிகுறி என்னை? எனின், உண்ணும் உணவும் மலசலமும் சம நிறை கொள்ளுதல் என்பது. கொண்டால் ஆயுட் பெருக்கம் உண்டு, பிணநாற்றம் நாறும் இப்புலால் துருத்தி பூமணம் கமழும் பூந்துருத்தியாகும் — பொன்மயமான தேகமாகும்—ரக்ஷக தேகமாக மாறும். இதுதான் முத்தி வாயில்—அமல முதற்படி.

இவ்வாறு விமலமடைந்த தேகமுடையோர் ஆற்றல் சாதலடையும் வல்லபம் பெற்ற உலக மாக்களால் அளவிடுதற்கு எளிதாகுமா? இம்முதற்படியை அடைந்தோர் பெற்றி முன்னும் சில கட்டுரைகளில் கூறப்பட்டது. ஆதலால் ஈண்டும் விரித்தல் மிகை.

இதுகாறும் கூறியவைகளால் அரிய பெரிய வேத உண்மைகளாகிய அருந்தல் பொருந்தல் என்பவைகளே முத்திவாயிலில் அடிவைப்பதற்கு இன்றியமையாச் சாதகங்களாம் என்பதும் இவை கைவரப் பெறுதார்க்கு முத்திவாயில் முயற்கொம்பே என்பதும் ஒருவாறு விளக்கப்பட்டன.

சுபம்.

"வித்தகம்"

விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ. 0—8—0

கோர்ட்டு விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 1—0—0

☞ நீடித்த விளம்பரங்களுக்கு தனி விகிதம்.

வித்தக நிலையம்
புதுச்சேரி.

AVIS transmis par Monsieur le Capitaine Morizon, chef du cabinet de Monsieur le Gouverneur des Etablissements français dans l'Inde à Monsieur le Directeur du journal hebdomadaire "VITTAGAM":—

Une épidémie de meningite Cerebro-spinale sévit actuellement dans le Nord de l'Inde anglaise; quelques cas ont même été constatés dans la Présidence de Madras.

Les mesures d'hygiène préventive suivantes sont recommandées à la population des Etablissements français:

1°) Pratiquer matin et soir des instillations nasales d'huile gomenolée;

2°) Considérer les rhumes de cerveau et angines, mêmes légères, comme des débuts possibles de cette maladie et ne pas négliger de les traiter;

3°) Soumettre à l'examen d'un médecin tout cas de coryza ou angines fébriles.

அறிவிப்பு

கடிதர்களின்
அபிப்பிராயங்களுக்கு
அவர்களே பொறுப்பாளிகள்.

Sandhanam Printing Works, Pon[illegible] Le Gérant R.Nagarattinam.